

ஶ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்

முதலாயிரம்

பெரியாழ்வார் திருமொழி

5-ஆம் திருமொழி-தன்முகத்து
______*_______

* தன்முகத்துச்சுட்டி தூங்கத்தூங்கத்தவழ்ந்துபோய் *
பொன்முகக்கிண்கிணியார்ப்பப் புழுதியளைகின்றான் *
என்மகன்கோவிந்தன் கூத்தினைஇளமாமதீ *
நின்முகம்கண்ணுளவாகில் நீஇங்கேநோக்கிப்போ. (1)

என்சிறுக்குட்டன் எனக்கோரின்னமுதுஎம்பிரான் *
தன்சிறுக்கைகளால் காட்டிக்காட்டியழைக்கின்றான் *
அஞ்சனவண்ணனோடு ஆடலாடஉறுதியேல் *
மஞ்சில்மறையாதே மாமதீ! மகிழ்ந்தோடிவா. (2)

சுற்றும்ஒளிவட்டம்சூழ்ந்து சோதிபரந்தெங்கும் *
எத்தனைசெய்யிலும் என்மகன்முகம்நேரொவ்வாய் *
வித்தகன்வேங்கடவாணன் உன்னைவிளிக்கின்ற *
கைத்தலம்நோவாமே அம்புலீ! கடிதோடிவா. (3)

சக்கரக்கையன் தடங்கண்ணால்மலரவிழித்து *
ஒக்கலைமேலிருந்து உன்னையேசுட்டிக்காட்டும்காண் *
தக்கதறிதியேல் சந்திரா! சலம்செய்யாதே *
மக்கட்பெறாத மலடனல்லையேல்வாகண்டாய். (4)

அழகியவாயில் அமுதவூறல்தெளிவுறா*
மழலைமுற்றாத இளஞ்சொல்லால்உன்னைக்கூவுகின்றான் *
குழகன்சிரீதரன் கூவக்கூவநீபோதியேல் *
@ புழையிலவாகாதே நின்செவிபுகர்மாமதீ! (5)

தண்டொடுசக்கரம் சார்ங்கமேந்தும்தடக்கையன் *
கண்துயில்கொள்ளக்கருதிக் கொட்டாவிகொள்கின்றான் *
உண்டமுலைப்பாலறாகண்டாய் உறங்காவிடில் *
விண்தனில்மன்னிய மாமதீ! விரைந்தோடிவா. (6)

பாலகனென்று பரிபவம்செய்யேல் * பண்டொருநாள் -
ஆலினிலைவளர்ந்த சிறுக்கனவன்இவன் *
மேலெழப்பாய்ந்து பிடித்துக்கொள்ளும்வெகுளுமேல் *
மாலைமதியாதே மாமதீ! மகிழ்ந்தோடிவா. (7)

சிறியனென்றுஎண்ணிளஞ்சிங்கத்தை இகழேல்கண்டாய் *
சிறுமையின்வார்த்தையை மாவலியிடைச்சென்றுகேள் *
சிறுமைப்பிழைகொள்ளில் நீயும்உன்தேவைக்குரியைகாண் *
நிறைமதீ! நெடுமால் விரைந்துஉன்னைக்கூவுகின்றான். (8)

தாழியில்வெண்ணெய் தடங்கையாரவிழுங்கிய *
பேழைவயிற்றெம்பிரான்கண்டாய் உன்னைக்கூவுகின்றான் *
ஆழிகொண்டுஉன்னையெறியும் ஐய்யுறவில்லைகாண் *
வாழவுறுதியேல் மாமதீ! மகிழ்ந்தோடிவா (9)

* மைத்தடங்கண்ணி யசோதைதன்மகனுக்கு * இவை-
ஒத்தனசொல்லி உரைத்தமாற்றம் * ஒளிபுத்தூர்-
வித்தகன்விட்டுசித்தன் விரித்ததமிழிவை *
எத்தனையும்சொல்லவல்லவர்க்கு இடரில்லையே. (10)

அடிவரவு : தன் என் சுற்றும் சக்கரம் அழகிய தண்டு பாலகன் சிறியன் தாழியில் மை உய்ய.

@ புழை-துளை